தினந்தோறும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, தமிழக அரசால் 574 ஏக்கர் அரசு தரிசு புறம்போக்கு, தனியார் வசமிருந்த 69 ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு மீட்கப்பட்டிருக்கின்றன. அந்த இடத்தில் ஓர் ஒருங்கிணைந்த வளாகத்தை உருவாக்கி, மேற்சொன்ன அரசு அலுவலகங்களை, பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, சென்னையில் ஆக்கிரமிப்பில் இருந்த நிறைய இடங்களை வருவாய்த் துறையின்மூலமாக நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படி எடுக்கின்ற இடங்களில் அரசுத் துறையைச் சார்ந்த கட்டடங்களைக் கட்டவேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களிடத்தில் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அவ்வாறு கட்டடங்கள் கட்டுகிற நேரத்தில் அந்த அலுவலகங்கள் தனித்தனியாக இல்லாமல், எல்லாம் இணைந்த ஒரு பெரிய கட்டடமாக அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கட்டடங்கள் கட்டுகிற நேரத்தில் உங்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

6—

புனல் மின் திட்டம்

***10329—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2024 பிப்ரவரி 13]

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல்லில் புனல் மின் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு, திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) ஆம்.

(ஆ) ஒகேனக்கல் நீர் மின் திட்டம் 120 Megawatt (MW) *ஒன்றிய அரசுக்குட்பட்ட தேசிய நீர் மின் கழகத்தின்மூலம் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காவிரி நீர் மின் திட்டத்திற்குட்பட்டதாகும். இந்தத் திட்டத்திற்கு தமிழக அரசு இசைவு தெரிவித்துள்ளது. ஆனால், கர்நாடக மாநிலம் இதற்கு இசைவு அளிக்கவில்லை. ஆகையால், இந்த நீர் மின் நிலையத்தைச் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள இயலவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்சாரம் இல்லாமல் மனிதன் வாழலாம். மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது. தாயின் கருவறை பரிசோதனையில் இருந்து, கல்லறை வரை, அதாவது, கருவறையில் இருந்து கல்லறை வரை மின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, 2022 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மின் நுகர்வோர் 3 கோடியே 24 இலட்சத்து 65 ஆயிரம் பேர்; 2023 ஆம் ஆண்டு 3 கோடியே 31 இலட்சத்து 16 ஆயிரம் பேர் என மின் நுகர்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மின்சாரத்தின் பயன்பாடு நாளும் அதிகரிக்கின்ற இந்த வேளையில், தமிழ்நாட்டின் மின் தேவை 17 ஆயிரம் மெகாவாட் ஆகவுள்ளது. ஆனால், தமிழ்நாட்டின் மின் உற்பத்தி 16,915 மெகாவாட் என இருக்கிறது. மீதி தேவைப்படுவதை நாம் வெளியிலிருந்து வாங்கிக்கொள்கிறோம்.*

முற்பகல் 11–10

ஆனாலும்கூட, தமிழ்நாட்டில் குந்தா, காடம்பாறை, மேட்டூர் உள்ளிட்ட பெரிய அணைகள், சிற்றணைகள் மற்றும் கதவணைகள் என மொத்தம் 47 நீர் மின் உற்பத்தி நிலையங்கள் இருக்கின்றன.

இவற்றின் மூலமாக 2,320 Megawatt மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதைத் தவிர, அனல் மின் நிலையங்கள் மூலமாக 4,320 Megawatt மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், காற்றாலை மின் நிலையங்கள், அணுமின் நிலையங்கள் மூலமாக மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த மின் உற்பத்தியைப் பார்க்கிற நேரத்தில், அனல் மின் நிலையங்கள் மூலமாகவும், மற்ற மின் நிலையங்கள் மூலமாகவும் உற்பத்தி செய்கிற வேளையில், சுற்றுச்சூழல் சீர்கேடு, மாசுபடுதல், உயிரினங்களுக்குக் கேடு ஆகியன விளைகின்றன. அதே நேரத்தில், அதற்கான மின் உற்பத்திச் செலவும் அதிகமாகிறது. ஆகவே, நீர் மின் நிலையங்கள்மூலம் மின் உற்பத்தி செய்வது பொருத்தமாக இருக்கும். அதோடு மின்கட்டண உயர்வும் இருக்கின்ற காரணத்தினால், செலவு குறைவாகவும், எந்தப் பாதிப்பும் இல்லாத நீர் மின் நிலையங்கள் மூலமாக மின் உற்பத்தி செய்வது தேவை என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். பெண்ணாகரம் பகுதியில் காவிரி ஆற்றின் குறுக்கே ஒகேனக்கல்லில் கனமழை பொழிகிற நேரத்தில் வெள்ளப்பெருக்கு அதிகரிக்கிறது. ஆண்டுக்கு 160, 250 TMC அடி தண்ணீர் வீணாகக் கடலுக்குச் செல்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் நீர் மின் நிலையங்கள் அமைப்பது மிக ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால், தமிழக அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மறுபரிசீலனை செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. மணி அவர்கள் மின்சாரத்தினுடையத் தேவையை மிகச் சிறப்பாக வலியுறுத்தி இருக்கிறார்கள். துவக்கத்திலே “சம்சாரம் இல்லாமல் இருந்துவிடலாம்” என்று சொன்னார்கள். அதை இங்கே இருக்கக்கூடிய எத்தனை பேர் ஏற்றுக்கொள்வார்கள் என்று தெரியவில்லை. நான் அதை உறுதியாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை (சிரிப்பு) முதற்கண் இந்த அவைக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, மின்சாரத் தேவையைப் பொறுத்தளவில் நீங்கள் குறிப்பிடுவதைப்போல பல்வேறு மின் திட்டங்களை நாம் தற்போது

2024 பிப்ரவரி 13]

செயல்படுத்தி வருகிறோம். அனல் மின் திட்டங்கள், காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்கள், புனல் மின் நிலையங்கள் என்று பல திட்டங்களை நாம் செயல்படுத்தி வருகிறோம். பொதுவாக, இன்றைக்கு உலகம் முழுவதிலும் மரபுசாரா எரிசக்தியை நோக்கி நாம் பயணிக்கத் துவங்கியிருக்கிறோம். ஒருபுறம் fossil free power நமக்கு வரவேண்டும். சில மேற்கத்திய நாடுகளில், அனல் மின் நிலையங்கள் இருக்கக்கூடிய இடங்களில், எங்கு அதிகமான மாசு உற்பத்தியாகிறதோ, அங்கு penalty போடக்கூடிய அளவிற்குப் போகிறார்கள். எனவேதான், புதிய அளவிலே மரபுசாரா எரிசக்தியை உற்பத்தி செய்யக்கூடிய திட்டங்களைப் பொறுத்தளவில், தற்போது பெருமளவிலே நமக்கு வரக்கூடிய investments பார்த்தீர்கள் என்றால்கூட solar and wind power உற்பத்தி செய்வதற்காக தென் தமிழகத்தை நோக்கி பெரிய அளவில் industrial investments-ம் வருகின்றன. எனவே, தமிழ்நாடு இந்திய அளவிலே non-conventional energy, மரபுசாரா எரிசக்தியை உருவாக்குவதிலே மிக முன்னணியில் இருக்கிறது. குறிப்பாக, நீங்கள் சொன்னதைப்போல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கக்கூடிய இந்த அரசு இப்போது புனல் மின் திட்டங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறது. குறிப்பாக, குந்தா நீரேற்று புனல் மின் திட்டம், கொல்லிமலை புனல் மின் திட்டம் இரண்டுமே தற்போது முக்கியமான திட்டங்களாக நடைமுறையிலே இருக்கின்றன. சில நாட்களுக்கு முன்பாக கொள்கை முடிவு எடுத்து இத்தகைய திட்டங்களை உருவாக்குவதற்கு மேல்பவானி-நீலகிரி, சாண்டிநல்லா-நீலகிரி, சீகூர்-நீலகிரி ஆகிய மூன்று திட்டங்களையும் NTPC (National Thermal Power Corporation) மூலமாகச் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. இதுதவிர, PPP model (Public private partnership) பொது-தனியார் பங்களிப்பின்மூலமாக 13-12-2023 ஆம் தேதியிட்ட அரசாணை எண் 106-ன்படி கொள்கை ரீதியிலான ஒரு முடிவினை எடுத்து, மேல்பவானி-நீலகிரி, சாண்டிநல்லா-நீலகிரி, கோதை ஆறு, மணலாறு, ஆழியாறு, வெள்ளிமலை, பாலாறு, பொருந்தலாறு, மஞ்சளாறு, சிலஹல்லா, சாத்தாறு, கன்னியாகுமரி ஆகிய இடங்களிலே இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் அரசால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, நீங்கள் கோரியிருப்பதைப்போல் புதிய புனல் மின் திட்டங்கள் உள்ளிட்ட நிறைய திட்டங்களை எடுத்துக்கொள்வதற்கு அரசால் ஏற்கெனவே ஆவன செய்யப்பட்டுள்ளது.

[2024 பிப்ரவரி 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தைக் கொடுத்தார்கள். புனல் மின் நிலையங்கள் மூலமாக உற்பத்திச் செலவு குறைவு, சுற்றுச்சூழல் பாதிப்பில்லை என்ற அடிப்படையில் இப்போது 47 நீர் மின் நிலையங்கள் செயல்படுகின்றன. அதோடு புதிய புனல் மின் நிலையங்கள் அமைக்க அரசு ஒப்புதல் வழங்கியிருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று. குறிப்பாக, ஒகேனக்கல் கர்நாடக மாநில எல்லையோரப் பகுதி என்ற நிலையில் இருப்பதோடு, மாநிலப் பிரச்சினை இருந்தாலும்கூட, தேசிய நீர் மின் கழகத்தின் மூலமாக இந்த மின் திட்டத்தை உருவாக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

முற்பகல் 11–15

கடந்த காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இதை நான் முன்வைத்தேன். அதைத் தொடர்ந்து, நடுவண் அமைச்சராக இருந்த நண்பர், அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களிடத்திலேயும் கோரிக்கை வைத்து, அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இருந்தாலும், இத்திட்டம் நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால், தமிழக அரசின் மூலமாகவோ அல்லது தேசிய நீர் மின் கழகத்தின் மூலமாகவோ அல்லது கர்நாடக மாநில அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு ஒரு முத்தரப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டு, இதை நிறைவேற்றினால், மிக அதிக அளவில், ஏறக்குறைய 1150 மெகாவாட் அளவில் மின் உற்பத்தி செய்வதற்கேற்றவகையில் புனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே, அதை அரசு முனைந்து செயல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை வைக்கின்ற அதே நேரத்தில், விரைந்து நிறைவேற்றுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2024 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, National Hydro Electric Power Corporation-தேசிய நீர் மின் கழகத்தின் சார்பாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 2008 ஆம் ஆண்டிலே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே எடுத்துச்சொல்லி, அதனடிப்படையிலே, அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் ஒன்றிய அரசின் மூலமாக இந்தத் திட்டம் வந்தது. இந்த முத்தரப்பு ஒப்பந்தம்-Tripartite agreement, ஒன்றிய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் கர்நாடக அரசு ஆகிய மூன்றும் சேர்ந்து மேற்கொள்ளவேண்டிய draft agreement-ஐ ஏற்கெனவே தயார் செய்து கொடுத்திருந்தோம். தமிழ்நாடு அரசு தனது இசைவைத் தெரிவித்துவிட்டது. ஆனால், கர்நாடக அரசு அதற்கு இசைவு தெரிவிக்காத நிலையில், அத்திட்டம் நிலுவையில் இருக்கிறது. இந்த Tripartite agreement, draft agreement நிலுவையில் இருக்கின்றபோதே, கர்நாடக அரசு, “Karnataka Power Corporation Limited சார்பாக நாங்களாகவே அந்த இடத்தில் அமைக்கிறோம்” என்று சொன்னார்கள். சிவசமுத்திரம், ராசிமணல், ஒகேனக்கல் உள்ளிட்டு இருக்கக்கூடிய நான்கு திட்டங்கள் அவை. அதில், அவர்கள் சில திட்டங்களை கூடுதலாகச் சேர்த்து, “அந்தத் திட்டங்கள் இருக்கக்கூடிய இடத்திலே நாங்களாக அதைச் செய்கிறோம்” என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு தமிழ்நாடு அரசு ஒத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால், காவிரி நதிநீர் பிரச்சினை இரண்டு மாநிலங்களுகிடையே இருக்கக்கூடிய பிரச்சினை. இங்கு புதிய நீர் மின் நிலைய திட்டங்கள் வருமென்றால் அதற்கு தமிழ்நாட்டின் ஒத்திசைவு தேவை என்பதை நாம் வலியுறுத்தியிருக்கிறோம். எனவே, தமிழ்நாட்டின் இசைவு இல்லாமல் கர்நாடக அரசு இதைச் செய்யக் கூடாது என்று ஒன்றிய அரசின் மின்சாரத் துறைக்கும் நாம் சொல்லியிருக்கிறோம். அதேபோன்று, நீர்வளத் துறைக்கும், வனத் துறைக்கும், “தமிழ்நாட்டின் இசைவு இல்லாமல் எதற்கும் approval கொடுக்கக்கூடாது” என்பதையும் நாம் வலியுறுத்தியிருக்கிறோம். இரண்டு மாநிலங்களிடையே இருக்கக்கூடிய பிரச்சினை இது. அந்த நீர்மின் நிலையம் அமையப்பெறும் பகுதி நீரிலே மூழ்கக்கூடிய பகுதியாக இரண்டு மாநிலங்களின் எல்லைக்குள் வருவதால்

இதற்கு ஓர் ஒத்திசைவு வருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு முயற்சிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

மாற்றுத்திறனாளிகள் பயனுறு கட்டுமானச் சான்றிதழ்

***51712—டாக்டர் நா. எழிலன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய கட்டுமானங்களுக்கு இசைவளிக்கும் முன் மாற்றுத்திறனாளிகள் எளிதில் வந்து செல்லும் கட்டுமானம் இருப்பதற்கான சான்றிதழைக் கட்டாயமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாற்றுத்திறனாளிகளின் வசதிகளை முன்னிட்டு, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019, விதி எண் 43 (a) முதல் (d) வரை உள்ள விதிகளின்படி 2,000 சதுர அடிக்கு மேல் உள்ள அனைத்து கட்டடங்களிலும் மாற்றுத் திறனாளிகள் வந்து செல்கின்ற வகையில் அமைக்கப்பட வேண்டுமென்ற விதிகள் உருவாக்கப்பட்டு, அந்த விதிகளின்படி சமர்ப்பிக்கப்படும் வரைபடங்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. அந்த வரைபடத்தின்படி அவர்கள் அந்தக் கட்டடத்தைக் கட்டவில்லையென்றால், அந்தக் கட்டடத்தைப் பயன்படுத்த முடியாத அளவிற்கு அதற்கு seal வைக்கப்படுகிறது. அவர்களுக்கு Completion Certificate கொடுக்கப்படுவதில்லை. எனவே, மாற்றுத்திறனாளிகளுக்கு முழுமையாகப் பயன்படுகின்ற வகையிலே இந்தச் சட்டம் அமலாக்கப்பட்டு வருகிறது